## தவலம பிரதேச சபை

## காலி மாவட்டம்

------------------------------------

1. நிதிக் கூற்றுக்கள்

------------------------------

1.1 நிதிக் கூற்றுக்கள் சமர்ப்பித்தல்

-----------------------------------------------------

மீளாய்வாண்டிற்கான நிதிக் கூற்றுக்கள் 2015 மார்ச் 31 திகதியும், முன்னைய ஆண்டிற்கான நிதிக் கூற்றுக்கள் 2014 மார்ச் 27 திகதியும் கணக்காய்விற்கு சமர்ப்பிக்கப்பட்டிருந்ததுடன், மீளாய்வாண்டிற்கான கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கை 2015 ஆகஸ்ட் 31 திகதி சபையின் செயலாளருக்கு அனுப்பப்பட்டிருந்தது.

1.2 அபிப்பிராயம்

---------------------

இவ்வறிக்கையின் 1.3 பந்தியில் குறிப்பிடப்பட்டுள்ள விடயங்கள் ஏற்படுத்தும் தாக்கங்கள் தவிர, நிதிக் கூற்றுக்களில் 2014 திசெம்பர் 31 திகதியில் உள்ளவாறு தவலம பிரதேச சபையின் நிதி நிலைமை மற்றும் அத் திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான அவற்றின் நிதிச் செயற்பாடுகளும் காசோட்டமும் இலங்கை பொதுத்துறை கணக்கீட்டு நியமங்களுக்கு இணங்க உண்மையான மற்றும் நியாயமான நிலைமை ஒன்றினை வெளிப்படுத்துகின்றது என்பது எனது அபிப்பிராயமாகும்

1.3 நிதிக் கூற்றுக்கள் மீதான கருத்துரைகள்

----------------------------------------------------------------

1.3.1 கணக்கீட்டுக் குறைபாடுகள்

-----------------------------------------------

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) 04 நிர்மாண வேலைகளுக்காக மீளாய்வாண்டிற்காக ரூபா 220,000 இற்கான மூலதன உதவி மற்றும் செலுத்த வேண்டிய மூலதனச் செலவுகள் ஆக ஏற்பாடுகள் மேற்கொள்ளப்படாமையால் மீளாய்வாண்டிற்கான மூலதன உதவி, மூலதனச் செலவுகள் கடன்பட்டோர் மற்றும் கடன்கொடுத்தோர் அதே தொகையால் குறைவாகக் காட்டப்பட்டுள்ளது.

(ஆ) மீளாய்வாண்டின் போது சபைக்கு கிடைத்திருந்த ரூபா 684,367 இற்கான சொத்துக்களை மூலதன உதவிகள் என நிதிக் கூற்றுக்களில் காட்டப்பட்டிருக்கவில்லை.

(இ) மீளாய்வாண்டின் போது உள்ளூராட்சி மற்றும் மாகாண சபை அமைச்சில் இருந்து சபைக்கு கிடைத்திருந்த ரூபா 6,390,000 தொகை பெறுமதியான டபள் கப் வண்டி நிதிக் கூற்றுக்களில் இருந்து கைவிடப்பட்டுள்ளது.

(ஈ) மூலதன சொத்துக்கள் கொள்வனவு செய்வதற்காகவும் மூலதனச் சொத்துக்கள் அபிவிருத்தி செய்வதற்காகவும் செலவிடப்பட்டிருந்த ரூபா 1,335,200 இற்கான தொகை மீண்டுவரும் செலவின் கீழ் காட்டப்பட்டிருந்தமையால் மூலதனச் செலவுகள் முறையே ரூபா 1,335,200 வீதம் மிகையாகவும் குறைவாகவும் காட்டப்பட்டிருந்தது.

(உ) மீளாய்வாண்டின் போது கொள்வனவு செய்திருந்த ரூபா 694,060 பெறுமதியான நிலையான சொத்துக்கள் நிதிக் கூற்றுக்களில் மூலதனப்படுத்தியிருக்கவில்ல.

(ஊ) மீளாய்வாண்டின் போது பூர்த்தி செய்யப்படாத நிர்மாண வேலைகளுக்காக செலுத்தியிருந்த ரூபா 1,482,000 இற்கான முற்பணத் தொகை நிதிக் கூற்றுக்களில் தீர்க்கப்படாத முற்பணம் என காட்டப்படாமல் மூலதன செலவுகள் என காட்டப்பட்டுள்ளது.

(எ) 1994, 2009, 2010 மற்றும் 2013 ஆண்டுகளின் போது நிலுவை கணக்காய்வு கட்டணம் என கணக்காய்வாளர் தலைமை அதிபதிக்கு முறையே ரூபா 16,250 உம் ரூபா 40,356 உம் ரூபா 39,648 மற்றும் ரூபா 47,712 ஆக ரூபா 143,966 தொகை ஒன்றும் மற்றும் மீளாய்வாண்டிற்கான கணக்காய்வுக் கட்டணத்திற்காகவும் ஏற்பாடுகள் மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை.

(ஏ) மீளாய்வாண்டு தொடர்பாக கிடைக்க வேண்டிய நீதி மன்றத் தண்டப்பண வருமானம் ரூபா 183,499 தொகை எனினும் நிதிக் கூற்றுக்களில் ரூபா 216,061 தொகை என காட்டப்பட்டிருந்தமையால் மீளாய்வாண்டிற்கான தண்டம் மற்றும் எழுத்தாணைக் கட்டணம் வருமானம் மற்றும் வருமான கடன்பட்டோர் ரூபா 32,562 வீதம் மிகையாகக் காட்டப்பட்டுள்ளது.

(ஐ) முன்னைய ஆண்டின் பெற வேண்டிய முத்திரைக் கட்டண வருமானம் ரூபா 957,440 தொகை எனினும் நிதிக் கூற்றுக்களில் அவை ரூபா 600,000 தொகை என ஏற்பாடு செய்திருந்தமையால் நிதிக் கூற்றுக்களில் திரண்ட நிதியம் மற்றும் வருமானக் கடன்பட்டோர் ரூபா 357,440 வீதம் குறைவாகக் காட்டப்பட்டுள்ளது.

(ஒ) சபைக்குச் சொந்தமான நிலையான சொத்துக்கள் என கணிக்கப்படாத ரூபா 115,716 இற்கான பொருட் பதிவேட்டு பண்டங்கள் நிலையான சொத்துக்கள் என நிதிக் கூற்றுக்களில் காட்டப்பட்டுள்ளமையால் நிலையான சொத்துக்கள் அதே தொகையால் மிகையாகக் காட்டப்பட்டுள்ளது.

1.3.2 தொங்கல் கணக்குகள்

---------------------------------------

மீளாய்வாண்டு திசெம்பர் 31 திகதியில் உள்ளவாறு தொங்கல் கணக்கில் காணப்பட்ட ரூபா 18,448 இற்கான வரவு மீதியினை இனங்கண்டு கணக்குகளில் சீராக்கல் மேற்கொள்வதற்கு நடவடிக்கை எடுத்திருக்கவில்லை.

1.3.3 கணக்காய்விற்கான சான்றுகள் இன்மை

------------------------------------------------------------------

நிதிக் கூற்றுக்களில் காட்டப்பட்டிருந்த கூட்டுத்தொகை ரூபா 72,328,952 இற்கான கொடுக்கல் வாங்கல்கள் தொடர்பாக நாளது வரை பேணப்பட்ட நிலையான சொத்துக்கள் பதிவேடு, கணிப்பீட்டுச் சபை அறிக்கைகள், கடன்கொடுத்தோர் பதிவேடு, கடன்பட்டோர் பதிவேடு, காலப்பகுப்பாய்வு மற்றும் மீதிகளை உறுதிப்படுத்தும் சான்றிதழ்கள் போன்ற சான்றுகள் கணக்காய்விற்கு சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை.

2. நிதி மீளாய்வு

-----------------------

2.1 நிதி விளைவு

-----------------------

சமர்ப்பிக்கப்பட்டிருந்த நிதிக் கூற்றுக்களின் பிரகாரம், 2014 திசெம்பர் 31 திகதியில் முடிவடைந்த ஆண்டின் போது சபையின் மீண்டுவரும் செலவினை விஞ்சிய வருமானம் ரூபா 1,129,676 ஆக காணப்பட்டதுடன், அதற்கு நேரொப்ப முன்னைய ஆண்டின் மீண்டுவரும் செலவை விஞ்சிய வருமானம் ரூபா 379,708 ஆகும்.

2.2 வருமான நிருவாகம்

--------------------------------

2.2.1 ஏக்கர் வரி

---------------

மீளாய்வாண்டு மற்றும் முன்னைய ஆண்டுகள் தொடர்பாக அறவிடப்பட வேண்டியிருந்த ரூபா 79,109 இற்கான ஏக்கர் வரி 1987 இன் 15 ஆம் இலக்க பிரதேச சபை சட்டத்தின் பிரிவு 158(1)(அ) இன் பிரகாரம் அறவீடு செய்வதற்காக நடவடிக்கை எடுத்திருக்கவில்லை.

2.2.2 வாடகை

--------------

(i) மீளாய்வாண்டு மற்றும் முன்னைய ஆண்டுகள் தொடர்பாக அறவிடப்பட வேண்டியிருந்த ரூபா 67,000 இற்கான வாடகை 1987 இன் 15 இலக்க பிரதேச சபைச் சட்டத்தின் பிரிவு 159(1) இன் பிரகாரம் அறவீடு செய்வதற்காக நடவடிக்கை எடுத்திருக்கவில்லை.

06 மாதங்களை மிகைத்துள்ள வாடகை நிலுவையாகவுள்ள 5 வாடகையாளர்களிடம் 2014 திசெம்பர் 31 திகதி ரூபா 60,200 நிலுவை கடை வாடகை மற்றும் தண்டப் பண வருமானம் ஒன்று அறவீடு செய்ய வேண்டியிருந்த போதிலும் வாடகை உடன்படிக்கை நிபந்தனையின் பிரகாரம் செயற்படுவதற்கு சபைச் செயலாளரினால் நடவடிக்கை எடுத்திருக்கவில்லை.

(ii) தென் மாகாண, உள்ளூராட்சி ஆணையாளரின் 2010 திசெம்பர் 27 திகதி இலக்கம் தபாஸங்/பபகொ/2010/01 கொண்ட சுற்று நிருபத்தின் 5 வது பந்தியின் பிரகாரம் குறைந்தளவு 05 வருடத்திற்கு ஒரு முறையேனும் பெறுமதி மதிப்பீடு செய்யப்பட்டு அதன் பிரகாரம் கடை வாடகை அறவீடு செய்யப்பட வேண்டும். எனினும் வாடகை உடன்படிக்கை இன்றி நாளது வரை ஆக்கப்படாமல் , 12 கடைகள் நடத்தப்பட்டிருந்தன. சபைக்கு தலைமை பெறுமதி மதிப்பீட்டாளரின் 2014 ஜூன் 16 திகதிய இலக்கம் GL-11/RP/2154 கொண்ட கடிதத்தின் மூலம் பெறுமதி மதிப்பீட்டு பெறுமதி குறிப்பிட்டிருந்த போதிலும் சபையினால் அதன் பிரகாரம் கடை வாடகை அறவீடு செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்படாமல் 09 வருடங்களுக்கு முன்னர் மேற்கொள்ளப்பட்டிருந்த மதிப்பீட்டின் பிரகாரம் வாடகை அறவிடப்பட்டுள்ளமையால் சபைக்கு ரூபா 90,800 இற்கான நட்டம் ஒன்று ஏற்பட்டுள்ளது.

(iii) சபைக்குச் சொந்தமான படஹேன இரண்டு மாடி வர்த்தக தொடர் கட்டிடத்தில் 08 கடைகளில் இருந்து அறவிடப்பட வேண்டியிருந்த ரூபா 538,000 தொகை 10 வருடங்களை கழித்திருந்த போதிலும் அறவீடு செய்வதற்காக சபை செயலாளர் நடவடிக்கை எடுத்திருக்கவில்லை.

2.2.3 அனுமதிப்பத்திரக் கட்டணம்

-----------------------------------------------------

அனுமதிப்பத்திரக் கட்டணம் மற்றும் வர்த்தக வரி அறவிடப்பட வேண்டிய வர்த்தக நிறுவனங்கள் பற்றி 2014 ஆண்டு தொடர்பாக வருடாந்த மதிப்பீடு ஒன்று மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை. 2014 திசெம்பர் 31 திகதியில் உள்ளவாறு 226 வர்த்தக நிறுவனங்களில் இருந்து ரூபா 274,550 இற்கான நிலுவை வர்த்தக வரி மற்றும் வர்த்தக அனுமதிப்பத்திரக் கட்டணம் காணப்பட்ட போதிலும் 1987 இன் 15 ஆம் இலக்க பிரதேச சபைச் சட்டத்தின் பிரிவு 152(4) இன் பிரகாரம் நிலுவைத் தொகையை அறவீடு செய்வதற்காக சபையின் செயலாளர் நடவடிக்கை எடுத்திருக்கவில்லை.

2.2.4 நீதி மன்றத் தண்டப் பணம் மற்றும் முத்திரைக் கட்டணம்

-----------------------------------------------------------------------------------------------

மாகாண சபையின் பிரதான செயலாளரிடம் மற்றும் ஏனைய அதிகாரிகளிடம் 2014 திசெம்பர் 31 திகதியில் உள்ளவாறு அறவிடப்பட வேண்டிய நீதி மன்றத் தண்டப் பணம் ரூபா 469,936 உம் மற்றும் முத்திரைக் கட்டணம் ரூபா 1,850,000 உம் கிடைக்க வேண்டியிருந்தது.

3. செயற்பாட்டு மீளாய்வு

---------------------------------------

3.1 அதிகாரமற்ற கொடுக்கல் வாங்கல்கள்

-----------------------------------------------------------------

(அ) நிர்மாண வேலைகளுக்காக பெக்கோ இயந்திரம் ஒன்று பயன்படுத்தியதற்காக கொடுப்பனவு மேற்கொள்ளல்

---------------------------------------------------------------------------------------------------------------------------------------------

முன்னைய ஆண்டுகளின் போது நான்கு நிர்மாண வேலைகளுக்காக பெக்கோ இயந்திரம் ஒன்று 239 மணித்தியாளங்கள் பயன்படுத்தியதற்காக 2014 ஆண்டின் போது சபை நிதியத்தில் இருந்து ரூபா 286,800 தொகை செலுத்தப்பட்டுள்ளது.

இது தொடர்பாக பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(i) ஒவ்வொரு நிர்மாண வேலைகளுக்காக மதிப்பீடுகள் தயாரிக்கப்பட்டு சபையின் அங்கீகாரம் பெற்றிருக்கவில்லை.

(ii) 2012 மற்றும் 2013 ஆண்டுகளின் போது நிர்மாண வேலைகள் மேற்கொள்ளப்பட்டதென பெக்கோ இயந்திர உரிமையாளர் பில்பத்திரங்கள் சமர்ப்பித்திருந்த போதிலும் அந்த பில் பத்திரங்கள் அக் காலப் பகுதியில் சபையில் கடமையாற்றிய தொழிநுட்ப சேவை அலுவலர்/ அலுவலர்களினால் விதந்துரைக்கப்பட்டிருக்கவில்லை. அவ்வாறாயினும் குறிப்பிட்ட பில் பத்திரங்கள் திறந்தொழில் கவனம் செலுத்தப்படாமல் சபையில் தற்போது கடமையாற்றும் தொழில்நுட்ப சேவை அலுவலரினால் 2014 மார்ச் 03 திகதி விதந்துரைக்கப்பட்டுள்ளது.

(iii) பெக்கோ இயந்திரம் வாடகைக்கு பெறுவதற்காக கூறுவிலை கோரப்பட்டிருக்கவில்லை.

(iv) சபையினால் நிர்மாண வேகைள் தொடர்பாக கோவைகள் பேணப்பட்டிருக்கவில்லை.

(v) இக் கொடுப்பனவு தொடர்பாக முன்னைய ஆண்டின் போது கடன்கொடுத்தோர் ஏற்பாடுகள் மேற்கொண்டிருக்கவில்லை.

(ஆ) விழாச் செலவுகள்

--------------------------------

1987 இன் 15 ஆம் இலக்க பிரதேச சபைச் சட்டத்தின் 132(ஓ) பிரிவின் பிரகாரம் பொது பொதுவாக முக்கியத்துவம் உடைய விடயம் தொடர்பான விழாச் செலவு தொடர்பாக ஒரு வருடத்திற்கு மொத்த கூட்டுத்தொகை ரூபா ஆயிரத்தினை மிகைக்காது இருக்க வேண்டும். அதனை மிகைக்குமிடத்து அதற்காக அமைச்சரின் கடிதத்தின் மூலமான பூர்வாங்க அங்கீகாரத்தினை எழுத்து மூலம் பெற்றுக்கொள்ள வேண்டும். எனினும் சபையினால் அமைச்சரின் அங்கீகாரம் இன்றி 2014 ஆண்டின் போது ரூபா 182,621 தொகை ஒன்று சபை நிதியத்தில் இருந்து செலவிடப்பட்டுள்ளது.

3.2 முகாமைத்துவத் திறமையின்மை

------------------------------------------------------

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்பட்டன.

சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்கள் கூற்று சமர்பிக்காமை

----------------------------------------------------------------------------------------------

1988 இன் 74 ஆம் இலக்க (திருத்திய) சட்டத்தினால் திருத்தப்பட்ட 1975 இன் 01 இலக்க சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்கள் வெளிப்படுத்தல் சட்டத்தின் தேவையின் பிரகாரம் சபையின் தலைவர் உப தலைவர் உட்பட அனைத்து அங்கத்தவர்களினாலும் சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்கள் கூற்று வழங்க வேண்டும். சபையின் தலைவர், உப தலைவர் 07 அங்கத்தவர்களினால் 2015 ஏப்ரல் 10 திகதி வரையும் 2011 முதல் 2014 ஆண்டு வரையும் சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்கள் கூற்று வழங்கியிருக்கவில்லை.

3.3 மின்பிறப்பாக்கி கொள்வனவு செய்தல்

--------------------------------------------------------------

2014 பாதீட்டு பிரேரணை பிரதேச சபைகளை வலுப்படுத்தும் தேசிய நிகழ்ச்சித் திட்டத்தின் கீழ் சபையினால் ரூபா 999,900 தொகை ஒன்று செலவிடப்பட்டு தகனசாலைக்காக மின்பிறப்பாக்கி ஒன்று கொள்வனவு செய்யப்பட்டுள்ளது.

இது தொடர்பாக பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(i) மின்பிறப்பாக்கி கொள்வனவு தொடர்பாக நியமக் குறிப்பீடு தயாரித்திருக்கவில்லை.

(ii) சமர்ப்பிக்கப்பட்டிருந்த கூறுவிலைத் திறந்த விலைக் கோறல் மூலம் கிடைத்திருந்த கூறுவிலைகளா என உறுதிப்படுத்தப்படவில்லை. கிடைத்திருந்த கூறுவிலைகள் அலுவலக முத்திரை பதியப்பட்டிருக்கவில்லை.

(iii) 1988 இன் பிரதேச சபை (நிதி மற்றும் நிருவாக) விதிகள் 177 மற்றும் 178 பிரகாரம் கொள்வனவு செய்வதற்காக சபைக்கு அல்லது நிதிக் குழுவிற்கு சமர்ப்பிக்கப்பட்டதற்கான சான்றுகள் கணக்காய்விற்கு சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை. இதன் பிரகாரம் சமர்ப்பித்திருந்த கூறுவிலைகள் தொழிநுட்ப மதிப்பீட்டு குழுவிற்கு சமர்ப்பிக்கப்பட்டு விதப்புரை பெறப்பட்டிருக்கவில்லை.

(iv) சபை வழங்குனருடன் உடன்படிக்கை ஒன்று மேற்கொண்டிருக்கவில்லை.

(v) விலை கோறலின் பிரகாரம் மூலம் ஜப்பானில் அல்லது இங்கிலாந்தில் உற்பத்தி செய்யப்பட்ட கிலோவோட் 10 (10kv) ஐ விட மிகையான மின்பிறப்பாக்கி ஒன்று எனினும் சபையினால் சீனாவில் உற்பத்தி செய்யப்பட்ட 10(10kv) கான மின்பிறப்பாக்கி இயந்திரம் கொள்வனவு செய்யப்பட்டுள்ளது.

4. கணக்களிப் பொறுப்பும் நள்ளாளுமையும்

---------------------------------------------------------------------

4.1 பாதீட்டுக் கட்டுப்பாடு

-------------------------------------

பாதீட்டில் மதிப்பிடப்பட்ட மற்றும் உள்ளவாறான வருமானத்திடையே முரண்கள் காணப்பட்டதுடன் சில செலவு விடயங்கள் சேமிப்பு காணப்பட்டது என அவதானிக்கப்பட்டது. அதன் பிரகாரம் பாதீடு பயன்தரு கட்டுப்பாட்டுக் கருவி ஒன்றாக பயன்படுத்தியிருக்கவில்லை என அவதானிக்கப்பட்டது.

5. முறைமைகளும் கட்டுப்பாடுகளும்

------------------------------------------------------

பின்வரும் முறைமைகள் மற்றும் கட்டுப்பாட்டுப் பகுதிகள் தொடர்பாக சபையின் விஷேட கவனம் தேவைப்படுகின்றது.

(அ) கணக்கீடு

(ஆ) வருமான நிருவாகம்

(இ) சொத்துக்கள் முகாமைத்துவம்